**சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3- (கட்டம் II) -2016**

---

சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் 3 - (கட்டம் II) இன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனா அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் (சீடீவீசீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 24 ஆந் திகதிய 4510201401100000587 ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. முக்கிய நுழைவுகளை வழங்குகின்ற ஏற்கனவெயுள்ள தேசிய வீதிகள் மற்றும் கிராமிய வீதிகளை மீள்நிர்மாணித்து புனரமைத்தல் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு தரத்தால் அளவிடுதல் மற்றும் முன்னேற்றப்பட்ட நுழைவு கிடைக்கக்கூடிய சேவைகள் பகுதியில் வசிக்கின்ற மக்களிற்கான சமூக பொருளாதார நன்மைகளின் எண்ணிக்கையை வழங்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,590.61 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 117.67 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,253 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 100 மில்லியன் சீனா அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------

### 2.1 அபிப்பிராயம்

------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(இ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளித்தரப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 21.05 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்தவேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

## 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒடுக்கீடு | பயன்படுத்திய நிதிகள்: மீளாய்வாணடின் போது | | பயன்படுத்திய நிதிகள்: 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூஎஸ். டொலர் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | யூ.எஸ். டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யூ.எஸ். டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீனா அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம் | 100.00 | 13,253.00 | 2.250.00 | 14.86 | 2,193.97 | 14.86 | 2,193.97 |
| இலங்கை அரசாங்கம் | 17.66 | 2,337.61 | 350.00 | - | 348.50 | - | 371.31 |
| **மொத்தம்** | **117.66** | **15.590.61** | **2,600.00** | **14.86** | **2,542.47** | **14.86** | **2,565.28** |

## 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒட்டுமொத்த பதவியணியினர்களின் பொறுப்புக்களையும் அடையவேண்டிய பௌதீக மற்றும் நிதிகள் இலக்குகளையும் இனங்கண்டு செயற்திட்டத்தால் விரிவான ஒட்டுமொத்த திட்டமொன்றும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும்

தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், செயற்திட்ட செயன்முன்னேற்றமானது முழுமையான வினைத்திறனான முறையில் கண்காணிக்கப்பட்டு மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள 08 தேசிய மீதிகள் மற்றும் கிராமிய வீதிகளின் மீள்நிர்மாண வேலைகள் குறைக்கப்பட்டு மாற்றப்பட்டிருந்ததுடன் கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களிலுள்ள முறையே 80.60 கிலோமீற்றர் நீளமான ஏனைய 09 தேசிய வீதிகளிற்கான மற்றும் 48.25 கிலோமீற்றர் நீளமான 11 கிராமிய வீதிகளினதும் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு ரூபா 15,151.83 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் அதற்காக மேற்கொள்ளப்பட்டு கடனளிக்கும் முகவரின் அனுமதியில்லாமல் பெறப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், தேசிய வீதிகள் மற்றும் கிராமிய வீதியின் முறையே 2.71 சதவீதம் மற்றும் 4.26 சதவீத பௌதீக செயன்முன்னேற்றம் மாத்திரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்டது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதம செயற்திட்ட பணியாளர், 02 சிரேஷ்ட பொறியியலாளர்கள், செயற்திட்ட கணக்காளர், ஏனையவை போன்ற செயற்திட்டத்தின் முக்கிய முகாமைத்துவ பதவிகளின் நிலமைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மாதங்களிற்கு மேலாக வெற்றிடமாகவிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிஞ்சி 02 உத்தியோகத்தர்கள் செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 861,415 கூட்டுத்தொகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 நிதிக்கட்டுப்பாட்டிலுள்ள சர்ச்சைகள்

நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம் செயற்திட்டத்தால் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.